Tamil | தமிழ்

Australian Government
Aged Care Quality and Safety Commission

Engage
*Empower*
**Safeguard**

# தரமான மற்றும் பாதுகாப்பான முதியோர் பராமரிப்பைப் பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு.



**இந்தப் புதிய 'முதியோர் பராமரிப்புச் சட்டம்', முதியோர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அதில் முதியோர்களுக்கான 'உரிமைகள் கூற்று' ஒன்றும் அடங்கியுள்ளது. இந்த மாற்றங்கள் 1 நவம்பர் 2025 முதல் அமலுக்கு வந்தன.**

'உரிமைகள் கூற்று', உங்கள் முதியோர் பராமரிப்பில் நீங்கள் மையமாக இருப்பதை உறுதிசெய்ய உதவுகிறது. உங்கள் கலாச்சாரம் மற்றும் அடையாளம் மதிக்கப்படுவதற்கும், உங்கள் சமூகத்துடன் நீங்கள் தொடர்ந்து தொடர்பில் இருப்பதற்கான உரிமை இதில் அடங்கும்.

பாதுகாப்பாக இருக்கும் உணர்வுடனும், மரியாதையுடன் நடத்தப்படும் உணர்வுடனும், உங்களைப் பராமரிப்பவர்களால் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதற்குமான உரிமையும் உங்களுக்கு உண்டு.

இதில் பின்வரும் நிதியுதவி பெறும் முதியோர் பராமரிப்பு சேவைகளைப் பெறுவதற்கான உரிமை அடங்கும்:

- உங்கள் அடையாளம், கலாச்சாரம் மற்றும் பின்னணியை மதித்து ஆதரவாக இருக்கும் சேவைகள்
- எந்தப் பேரதிர்ச்சியும் உட்பட, உங்களின் அனுபவத்தை மதிக்கும் சேவைகள்
- அணுகக்கூடிய மற்றும் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவைகள்
- வன்முறை, துஷ்ப்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு கியன இல்லாத சேவைகள்.

உரிமைகள் அறிக்கை பற்றி **மேலும் அறிய** எங்கள் வலைத்தளத்தைப் பாருங்கள்.

## உங்கள் உரிமைகள் நிலைநிறுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்வது எப்படி

உங்கள் சேவை வழங்குநர் 'உரிமைகள் கூற்'றைப் புரிந்துகொண்டு அதைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் கவலை அல்லது புகாரை அவர்களிடம் தெரிவிக்கலாம். பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இதுவே பெரும்பாலும் எளிதான மற்றும் விரைவான வழியாகும்.

'புகார்கள் ஆணைய'ரிடம் உங்கள் கவலையை எழுப்பலாம் அல்லது புகார் அளிக்கலாம்:

**1800 951 822** திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

உங்கள் தலைநகரில் Aged Care Quality and Safety Commission, GPO Box 9819

இணைய-வழியில் www.agedcarequality.gov.au

info@agedcarequality.gov.au

உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், **1800 951 822** என்ற எண்ணில் எங்களை அழைத்து ஒருவரை ஏற்பாடு செய்யுமாறு கேளுங்கள். நீங்கள் 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை' Translating and Interpreting Service (TIS) –யை **131 450** என்ற எண்ணில்அழைத்து, உங்களுக்காக எங்களை அழைக்குமாறும் கேட்கலாம்.

புகார் செய்வதில் அல்லது தகவல்களைக் கண்டறிவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், இலவச, சுதந்திரமான மற்றும் இரகசியமான ஆதரவுதவிக்காக 'முதியோர் பரிந்துரை வலையமைப்'(Older Persons Advocacy Network (OPAN))புடன் தொடர்பு கொள்ளுங்கள். முதியோர் பராமரிப்புப் பரிந்துரை தொடர்பு எண்ணான **1800 700 600**-ஐ அழையுங்கள்.